பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை :7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : கார்த்திகை 19உ (5-12-67) செவ்வாய் வெளியூர் : கார்த்திகை 20உ (6—12—67) புதன் [இதழ் : 144

சம்பாப் பயிருக்குத் தண்ணீர் வசதி

மேட்டூர் நீர்மட்டக் குறைவைச் சமாளிக்க மாற்று ஏற்பாடு

தரைக்கடியில் உள்ள நீரை இறைக்கப் பம்பு செட்டுகள் அமைப்பு

தஞ்சை, டிச. 5—

"தஞ்சை மாவட்டத்தில், சம்பா நெற்பயிர்களை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று தமிழக அரசு உறுதியுடன் இருக்கிறது"

என்று இங்கு செய்தியாளர்களிடையே பேசுகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அரங்கபாஷ்யம் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"மேட்டூர் அணையில் தண்ணீர் மட்டம் குறைவாக இருப்பதால் பாசனத்திற்கு வேண்டிய தண்ணீரை விடுவதற்கு அரசு தீவிரமாக நடவடிககை எடுக்கும்; சம்பாப் பயிர்களுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படும்.

அண்மையில் சென்னையில் நடந்த உணவு உற்பத்தி கமிஷனர்—பாசன அதிகாரிகள் கூட்டமொன்றில், 'தரைக்கடியில் எங்கெங்கு தண்ணீர் கிடைக்கக் கூடுமோ அங்கெல்லாம் தண்ணீர் எடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது; இதற்காக, வேளாண்மைத் துறை, 95 இடங்களில் பம்பு செட்டுகளைப் பொருத்தியிருக்கிறது; இதுபோக, சில பம்பு செட்டுகளைக் கொடுத்துதவுமாறு நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கூடுமானவரை வடிமுனை குழாய்க் கிணறுகளுக்குத் தேவைப்படும் மின்சாரம் உடனடியாகக் கிடைக்கச் செய்வதற்காகத் தமிழக அரசு, மின்சார போர்டுக்கு ரூ. 15 இலட்சம் அனுமதியளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறது. 'சனவரி முதல் தேதிவாக்கில் மின்சார வசதி கிடைக்கும்' என மின்கழகத் தலைவர் கூறியிருக்கிறார்.

குறுவைச் சாகுபடியில் இதுவரையில் 2.17 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; இதில் 1.64 இலட்சம் டன் அரிசி பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இரயில்கள் மூலம் 72,850 டன் அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது; கடந்த ஆண்டு இதே நேரத்தில் அனுப்பப்பட்டிருப்பதைக் காட்டிலும் இது 6 மடங்கு அதிகமாகும்."

அரியானாவில் இடைத் தேர்தல்

சண்டிகார், டிச. 5—

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் அரியானா மாநிலத்தில், அடுத்த ஆண்டு மே திங்கள் 5-ந் தேதி அல்லது 12-ந் தேதி இடைத் தேர்தல் நடைபெறுமெனத் தெரிகிறது.

மேற்கு வங்க அநீதி

கண்டித்து தி.மு.க. வெளிநடப்பு

★

புதுடில்லி, டிச. 4—

"மேற்கு வங்கத்தில், அஜாய் முகர்ஜி அமைச்சரவையை கவர்னர் கலைத்துவிட்டு, டாக்டர் பி. சி. கோஷ் தலைமையில் புதிய அமைச்சரவை ஏற்படுத்தியது சட்டபூர்வமான செயலே" என்று உள்துறை அமைச்சர் சவாண், கடந்த நவ. 30-ஆம் நாள் மக்களவையில் வெளியிட்ட அறிக்கை, இன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

மற்றும் கம்யூனிஸ்டு (இடது—வலது) உறுப்பினர்களும், ச. சோ. கட்சியினரும், சில சுயேச்சை உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

ஆட்சிமொழி மசோதாவுக்கு திருத்தம்

தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத்தில் விவாதம்

புதுடில்லி, டிச. 4—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர்கள், இன்று இங்கு கூடி ஆட்சிமொழித் திருத்த மசோதாவுக்குத் தாங்கள் கொண்டுவரவிருக்கும் திருத்தங்கள் குறித்து விவாதித்தனர்.

அரசினர் கொண்டுவந்துள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதா முழு மன நிறைவளிக்கக்கூடியதாக இல்லையென விவாதத்தின்போது அவர்கள் கருத்தறிவித்தனர்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கச் சட்டபூர்வமான ஏற்பரடு தேவையென்று கோரினர்.

'மே' என்றிருக்கும் இடங்களில், 'ஷேல்' என்று போட வேண்டும் என்பது, தி. மு. கழக உறுப்பினர்கள் கொண்டுவரவிருக்கும் திருத்தங்களில் ஒன்றாகும்.

தி.மு.க. இடைத்தேர்தல் - நகராட்சித் தேர்தல் நிதி

இடைத் தேர்தல்கள்—நகராட்சித் தேர்தல்களுக்கான கழக நிதியாக இதுவரை கிடைத்துள்ள தொகைக்கான மாவட்ட வாரியான விவரம் இங்கு தரப்படுகிறது.

தேர்தல் நிதி அனுப்பும் தோழர்கள், 'பொருளாளர், தி. மு. கழகம், 'அறிவகம்', சென்னை-13' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

	ரூ.
கோவை	21,332
தென்னாற்காடு	15,004
தஞ்சை	13,521
மதுரை	11,100
வடஆற்காடு	10,102
திருச்சி	10,000
நெல்லை	7,671
கன்னியாகுமரி	4,500
தருமபுரி	4,404
இராமநாதபுரம்	3,401
சென்னை	3,068
செங்கற்பட்டு	2,805
சேலம்	2,750
கருநாடக மாநிலம்	350
	1,10,008
மாணவர் மாநாட்டில்	4,444
தனிப்பட்டோரால்	1,031
ஆக மொத்தம் ரூ.	1,15,483

—பொருளாளர், தி.மு.க.

அரசியலில் அடக்க உணர்ச்சி தேவை

புதிய வலிவு கிடைத்துவிட்டதாக இறுமாப்பு வேண்டாம்

கழகத் தோழர்களுக்கு அண்ணா அறிவுரை

"நமக்குப் புதிய வலிவு வந்துவிட்டதென்று எதைப் பற்றியும் கவலைப்படாத இறுமாப்பு நிலை நம்மிடையே தோன்றக் கூடாது!

"தேர்தலில் வெற்றி பெற்று நாங்கள் அமைச்சர்களாக அமர்ந்தவுடன், உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்; 20 ஆண்டுகளாக அனுபவித்த தொல்லை — கழகத்தில் ஈடுபாடு கொண்டதால் பலரது ஏச்சுப்பேச்சுக்கு ஆளாகித் தொல்லைப்பட்ட நிலை —இதையெல்லாம் தாங்கிக்கொண்டு, 'நம்முடைய கழகம் நாடாளுகிறது' என்றதும், மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை என்பதை என்னால் யூகிக்க முடிகிறது!

"'நம்மை இனி எதிர்ப்பாருமில்லை; எதிர்த்தாலும் வெல்வாருமில்லை'—என்ற எண்ணம் தோழர்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது! எங்களுக்குள்ளது போலவே கழகத் தோழர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்புணர்ச்சி வரவேண்டும்! 'அரசாள வந்துவிட்டோமே, இனி என்ன' என்ற எண்ணம் ஏற்படுமேயானால் அதனால் கழகத்திற்கு மட்டுமல்ல; நாட்டுக்கும் கெடுதல்! ஆகவேதான் அரசியலில் அடக்க உணர்ச்சி வேண்டும்!

"காங்கிரசுக் கட்சியின் இருபது ஆண்டுக்கால ஆட்சியை மக்கள் சகித்துக்கொண்டார்கள்—பொறுத்துக்கொண்டார்கள்—கட்டளையைக் கேட்டு நடந்தார்கள்; 'இனியும் பொறுக்க முடியாது' என்ற முடிவெடுத்து, நல்ல இயக்கமான கழகத்தை ஆதரித்து—ஆளுவதற்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள்! எவ்வளவோ தாங்கிக்கொண்டதற்குப் பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது!

"ஆரம்பத்திலேயே காங்கிரசுக் கட்சியின் போக்கைக் கண்டித்திருந்தால் இவ்வளவு பெரிய கெடுதல் ஏற்பட்டிருக்காது! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போதே கண்டித்திருந்தால் இவ்வளவு பெரிய கெடுதல் வந்திருக்காது! 1967-லேதான் அந்த உணர்வு ஏற்பட்டது!

"நாம் செய்திருக்கின்ற காரியத்துக்கு மகிழ்ச்சியடைந்து பெருமைப்பட்டுக்கொள்ளலாம்; இந்தியாவின் பல பகுதிகளிலே இருந்து வருகின்ற பத்திரிகைகளெல்லாம், தமிழகத்திலுள்ள தி. மு. கழக அரசின் சாதனைகள்பற்றிப் பாராட்டி எழுதுகின்றன; வெளிநாட்டிலிருந்து வருகின்ற தலைவர்களெல்லாம்—அதிகாரிகளெல்லாம் வாழ்த்துகின்றார்கள்!

"வெளிநாட்டுக்காரர்களெல்லாம் பாராட்டுகிறார்கள் என்பதால், ஐந்தாண்டுக்காலத்திற்கும் வேலையே செய்யாமல் இருந்துவிட்டு—செஸ்டர் பௌல்ஸ் என்னிடம் சொன்னதுபோல்—திறந்த காரில் போனாலே நீங்கள் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவீர்கள்' என்று இருந்துவிடக்கூடாது! அப்படிச் செய்வதால் ஓட்டுக் கிடைக்காது என்பதல்ல—அது முறையுமல்ல!

"நமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்கு உட்பட்டு—வசதி வாய்ப்புக்களைப் பெற்று — மக்களின் ஒத்துழைப்போடு உழைக்கவேண்டும் -- உழைக்க இருக்கிறோம்!"

—வண்ணைப் பொதுக்கூட்டத்தில்

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. பி.எல்.

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 19 (5—12—67) செவ்வாய்

தொழில் நிலையங்கள் தரும் நிதி!

தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கி வருவதைத் தடுக்க, தனி நபர் தீர்மானம் ஒன்றை நாடாளு மன்றத்தில் மது லிமாயி என்பவர் கொண்டுவந்திருக்கின்ருர்; அத் தீர்மானத்துக்கு, அரசாங்கச் சார்பிலும் ஆதரவு இருக்கும் எனத் தெரிகிறது.

மது லிமாயியின் தீர்மானத்துக்கு இப்பொழுது ஆதரவு காட் டத் துணிந்திருக்கின்ற காங்கிரசுக் கட்சி மேலிடம், இதற்குமுன், இத்தீர்மானத்தின் கருப் பொருளை முழுமூச்சாக எதிர்த்தே வந் திருக்கிறது. 'தொழில் நிறுவனங்கள் நன்கொடை வழங்குவதற் குத் தடைவிதிக்க வேண்டும்' என்ற கோரிக்கை கிளம்பிய ஒவ் வொரு நேரத்திலும், அதை எதிர்ப்பதில் காங்கிரசுக் கட்சி முன் னணியில் இருந்திருக்கிறது.

'அரசியல் கட்சிகளுக்குத் தொழில் நிறுவனங்கள் நன்கொடை கொடுப்பதற்குத் தடைவிதித்துச் சட்டமியற்ற வேண்டும்' என்பத தற்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியும், ஆதரவாக மற்ற அரசியல் கட்சிகளும் இருந்தன. மற்ற அரசியல் கட்சிகளின் கருத்துக்கு, இத்துறையில் காங்கிரசுக் கட்சியும் தனது முன்னைய கருத்தை மாற்றிக் கொண்டிருப்பறதற்குக் காரணம் என்ன?

தொழில் நிறுவனங்கள், காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே நிதி அளிப்பது என்ற முறை, காலப்போக்கில் மாறிவிட்டது. இப் பொழுதும் மற்ற கட்சிகளுக்குக் கிடைப்பதைவிடக் காங்கிரசுக் கட்சிக்குத்தான் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெரும் தொகை நன்கொடையாகக் கிடைத்து வருகிறது என்பதை மறுப்பதற் கில்லை. உண்மை நிலை இதுவாக இருந்திட்டாலும், இத்துறையில் தான் கொண்டிருந்த மனப்போக்கை, காங்கிரசு இப்பொழுது முழு அளவில் திருத்தம் செய்துகொண்டிருப்பது சிந்தனைக்குரியதே ஆகும்.

தொழில் நிறுவனங்களிடமிருந்து அரசியல் கட்சிகள் நன் கொடையாக நிதி பெறுவது, அரசியல் ஒழுக்கத்தைச் சீர்குலைக்கக் கூடியது—மக்களாட்சி முறைக்கு முரண்பாடானது—காலப்போக் கில் சனநாயக வளர்ச்சிக்கு உலைவைக்கக் கூடியது-என்ற உண் மையை உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொண்டு விட்டதனுல் தான், 'நன்கொடையாக நிதி அளிப்பதை, சட்டப்படி தடுத்துவிட வேண்டும்' என்ற தீர்மானத்துக்குக் காங்கிரசுக் கட்சி வந்திருக் கிறதா என்ருல், அதுதான் இல்லை. பின், எந்தக் காரணத்துக்காக, இந்த நன்கொடை விவகாரத்தில் காங்கிரசுக் கட்சி இப்பொழுது தனது பழைய முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறது?

'தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை யாக நிதி வழங்கிவருவதற்குச் சட்டப்படி தடை விதிக்க வேண்டும்' என்று அரசியல் கட்சிகள் மட்டுமே கோரிவரவில்லை; பொது வாழ் வில் ஒழுக்கக்கேட்டினைக் களைந்தெறிய வழிவகைகளைக் கண்டு கூறும் பொறுப்பான பணியை ஏற்றுக்கொண்ட சந்தானம் குழு கூட, 'நன்கொடையாக நிதி வழங்கும் விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துச் சட்டமியற்ற வேண்டும்' என்ற கருத்தை வலி யுறுத்தியிருக்கிறது.

சந்தானம் குழு அறிக்கையில் இடம் பெற்றுள்ள மேற்குறித்த பரிந்துரையைச் சுட்டிக்காட்டி, மற்ற அரசியல் கட்சிகள், தனிச் சட்டம் இயற்றவேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத் தின. அப்பொழுதும், அவ்வலியுறுத்தல் அனைத்தையும் காங்கிரசுக் கட்சி ஒதுக்கித்தள்ளிவிட்டது.

'அரசியல் கட்சிகளுக்குத் தொழில் நிறுவனங்கள் நிதி தருவது அரசியல் அறநெறியாகாது' எனக் கண்டித்து, உயர் நீதிமன்றங் கள் ஏற்கனவே தீர்ப்பு அளித்துள்ளன. அத்தீர்ப்பையும் அலட் சியம் செய்துவிட்டிருக்கிறது காங்கிரசுக் கட்சி!

இப்படியெல்லாம், ஆரம்பமுதலே, 'தொழில் நிறுவனங்களிட மிருந்து அரசியல் கட்சிகள் நிதி பெற்று வருவதற்குச் சட்டப்படி தடை விதிக்க வேண்டும்' என எழுந்த கோரிக்கைகள் பலவற் றிற்கும் இணக்கம் காட்டாதிருந்ததுடன், எதிர்த்தும் வந்திருக்கின்ற காங்கிரசுக் கட்சி, இப்பொழுது மட்டும் தனது எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டு, இதுபற்றிக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தனி நபர் தீர்மானத்தை ஆதரிக்க முன்வந்திருப்பதிலுள்ள இரகசியம் தான் என்ன?

கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும், காங்கிரசுக் கட்சியே ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தக்க அளவுக்கு வெற்றி ஈட்டி வந்திருக்கிறது; இம்மாபெரும் வெற்றியை, தனது தியா கத்தை மட்டுந்தான் காட்டி வெற்றி பெற்றிருப்பதாக முடிவுகட்டி விட முடியாது. ஆலை அரசர்களிடமிருந்தும், பெரும் பெரும் வர்த்தகச் சீமான்களிடமிருந்தும் நன்கொடையாகப் பெற்ற பெருந் தொகையைச் செலவழித்துத்தான் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று வந்திருக்கிறது என்பதை, காங்கிரசு மேலிடத் தலைவர்களே கூட மறுக்கமாட்டார்கள்!

ஆனுல், நான்காவது பொதுத் தேர்தலில், அந்த நிலை மாறியே விட்டது. தொழில் நிறுவனங்கள், காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே நிதி உதவி செய்துவந்த போக்கை மாற்றிக்கொண்டுவிட்டன; கடைசியாகக் காங்கிரசுக் கட்சிக்குத் தொழில் நிறுவனங்கள் கணிசமாகத்தான் நிதி கொடுத்துள்ளன என்ருலும், இதற்குமுன் கொடுத்துவந்ததைவிட குறைவானதே ஆகும். இதுவுமன்றி, எப்பொழுதும், கொடுத்துவந்துள்ள கூடுதலான நிதியை, இனியும் தொடர்ந்து தொழில் நிறுவனங்கள் தனக்கு மட்டுமே கொடுத்து வருமா என்பதிலும் காங்கிரசுக் கட்சிக்குப் பலத்த சந்தேகம் ஏற் பட்டுவிட்டது.

இது மட்டுமா? நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தொழில் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியைப் பெறக்கூடிய தகுதியை, ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவதன் வாயிலாக சில அரசியல் கட்சிகள் இப்பொழுது பெற்றுவிட்டுள்ளன; இதன் விளைவாக, ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய வலிவும் பொலிவும் காங்கிரசுக் கட்சி ஒன்றுக்கு மட்டுந்தான் உண்டு என்ற நம்பிக்கை யும் பொய்த்துப் போய்விட்டது; 'ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய வலிவுடைய அரசியல் கட்சிகளில், காங்கிரசுக் கட்சியும் ஒன்று' என்ற புதிய உண்மை நிலைநாட்டப்பட்டுவிட்டது.

'காங்கிரசுக் கட்சியே இந்தியா—இந்தியாவே காங்கிரசுக் கட்சி' என, இருபதாண்டுக்காலமாக இருந்துவந்த மயக்கம், நான் காவது பொதுத் தேர்தலில் மக்களுக்குத் தெளிந்துபோய்விட்டது. மீண்டும், 'காங்கிரசுக் கட்சியே அனைத்தும்' என்ற நம்பிக்கையை, இந்த நாட்டு மக்களிடம் ஊட்ட எவராலும் முடியாது.

'மற்ற அரசியல் கட்சிகளைப் போன்று காங்கிரசுக் கட்சியும் ஒரு அரசியல் கட்சிதான்' என்ற நிலை ஏற்பட்டுவிட்ட பின்னர், காங் கிரசுக் கட்சிக்கு மட்டுமே நிதியுதவி செய்யவேண்டிய கட்டாயமும் தொழில் நிறுவனங்களுக்கு இல்லாமற் போகிறது; இது இயல்பே ஆகும். இந்த இயல்புக்கு மாருக, தொழில் நிறுவனங்கள் நிதி கொடுக்க விரும்பினுலும், வழக்கம்போல் காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே அவைகள் நிதி கொடுக்கப் போவதில்லை; மற்ற அரசியல் கட்சிகளுக்கும், தொழில் நிறுவனங்கள் நிதி கொடுக்கத்தான் செய் யும். இவ்வகையில் காங்கிரசுக் கட்சி, தனிச் சலுகை எதனையும் இனி எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்த மகத்தான உண்மையை, இன்றையக் காங்கிரசுக் கட்சி மேலிடம் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டது. இதன் விளைவு தான், மது லிமாயியின் தனி நபர் தீர்மானத்தை, காங்கிரசுக் கட்சி ஆதரிக்க முன்வந்திருப்பது!

—கா. க.

சின்ன விஷயம்

ஓட்டுவதுதான் ஓட்டும்!

"முடிச்சவிழ்க்கக் கொடுத்ததும் அல்லாமல் இளிச்சவாய்ப் பட்டமும் கிடைத்ததாம்"

என்று பழமொழி சொல்லுவார்கள்! இந்தி பேசாத மக்கள், அந்த நிலைக்குத்தான் தள்ளப் பட்டு வருகிருர்கள்!

இந்தி வெறியர் மொரார்ஜி தேசாயின் பேச்சும் முயற்சிகளும் கண்டிக்கப்படாமல் விடுபடு மானுல், அந்த நிலைதான் ஏற்படும்!

"கரன்சி நோட்டுகளில், 'கேட்கும் போது குறித்த பணம் தருவதாக' ரிசர்வ் பாங்கி கூறும் 'ஆண்டிமாண்ட்' உறுதிமொழி, இனி இந்தியில் முதன்மையாக இருக்கும்; அதன் பக்கத்திலேயே ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்படலாம்.

"இதேபோல் இப்போது ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும் ரிசர்வ் பாங்கி கவர்னரின் கையெழுத்து, இந்தியிலும் பொறிக்கப்படும்."

புரிகிறதா இவற்றின் உட்பொருள்?

உள்துறை அமைச்சகத்தில், 'அற்புதமாக'ப் பணியாற்றிக்கொண்டிருப்பது, இந்தி வளர்ச் சித் துறைதான்! அதன், 'இந்தி சலாசர் சமிதி' என்ற இந்தி ஆலோசனைக் குழுவின் கூட்டத் தில்தான், வெறியர் மொரார்ஜி தேசாய், இப் படி ஆணவத்தோடு பேசி இருக்கிருர்!

'ரிசர்வ் பாங்கி உறுதிமொழி இனி இந்தியில் தான் முக்கியமாக இருக்கும்' என்கிற மொரார்ஜி, 'அதன் பக்கத்திலேயே ஆங்கிலத் திலும் அச்சடிக்கப்படலாம்' (அச்சடிக்கப்படா மலும் போகலாம்) என்று எவ்வளவு அழகாகச் சொல்லுகிருர் பார்த்தீர்களா?

தன்னைத் தவிர, இந்த உலகத்தையே, 'முட் டாள்கள் கூட்டம்' என்று நினைத்துக்கொண்டி ருக்கிருரோ—இந்தப் 'பெரியவர்'?

கள் குடித்தவனுக்குக் கள் ஏப்பம்! பால் குடித்தவனுக்குப் பால் ஏப்பம்! மொரார்ஜியிடம் வேறெதை எதிர்பார்க்க முடியும்!

நாயை உசுக்கச் செய்து நரி உள்ளே நுழைந்து கொண்ட கதையாய் திருட்டுத்தனமாகப் புகுந்துகொண்ட இந்தி என்ன ஆட்டம் போடு கிறது!

இதோடு இருந்தால் பரவாயில்லை! 'ரிசர்வ் பாங்கி கவர்னரின் 'கையெழுத்து' இந்தியிலும் பொறிக்கப்படும்' என்கிருரே மொரார்ஜி!

இதற்கு என்ன அர்த்தம்?—இப்போது இருக் கிற நிலைமையே—இந்திக்காரருக்கு இந்தி என்ருல், இந்தி தெரியாதவர்களுக்கு ஆங்கிலம் என்பதுதானே!

அப்படி இருக்க, ரிசர்வ் பாங்கி கவர்னரின் கையெழுத்து இந்தியில் வேண்டுமென்ருல் எப்படி?

அதாவது, ரிசர்வ் பாங்கி கவர்னராக வருகிறவர், ஒன்று—இந்திக்காரராக இருக்கவேண்டும்; அல்லது இந்தி எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்!

இன்னும் தெளிவாகச் சொன்ருல்,

"இந்தி தெரியாதென்ருல், ரிசர்வ் பாங்கி கவர்னர் போன்ற பெரும் பதவிகள் பெற முடியாது!"

இன்னமும் தமிழகக் காங்கிரசுக்காரர்கள், 'கற்ற றிந்த மோழைகளாய்—கண்ணிருந்தும் குருடர் களாய் இருக்கிருர்களே' என்றுதான் வேதனை யாக இருக்கிறது!

'ஏக இந்தியா' வேண்டுமென்பதற்காக, இந்த இந்தி ஏகாதிபத்தியத்தை நாம் சகித்துக் கொள்ள வேண்டுமாம்!

வான் குருவிக் கூடும், வன்கறையான் புற்றும், தேன் சிலந்தி இருட்டும், மனித முயற்சியில் 'ஆகா' என்பார்கள்! அது போலத்தான், காங்கிரசுக்காரரின் ஏக இந்தியாவும்! அது ஒரு கற்பனை மாளிகை! இல்லாத அதன் சுவற் றில்—புரியாத அதன் சித்திரத்தை எழுதிப் பார்க்கிருர் மொரார்ஜி!

உள்ளபடி இந்தியாவை ஒருமைப்படுத்த இந்த முயற்சியா? வெறும் இந்திக்கு ஏற்றம் தருவ தற்காக இந்த முயற்சியா?

எடுத்துவிட்ட கன்று எத்தனை நாளைக்கு?—இப் படி எல்லாம் சிறப்புச் செய்தா இந்தி வளரப் போகிறது?

விளக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு ஆற்று மணலில் புரண்டாலும், ஒட்டுவதுதானே ஒட்டும்?

—பூரணன்

உ. பி. அரசு வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை

'இந்தி தெரிந்திருக்க வேண்டும்' என்ற நிபந்தனையின் விளைவு

லக்னோ, டிச. 5—

உத்தரப் பிரதேச அரசுக்காக உ. பி. பொது சர்வீசு கமிஷன் விளம்பரப்படுத்தும் பதவிகள் நல்ல சம்பளத்தைக் கொண்டவையாக இருந்தாலும், அவை வெளி மாநி லங்களைச் சேர்ந்தவர்களைக் கவர வில்லை.

விண்ணப்பதாரர்கள் இந்தி தெரிந்தவர்களாக இருப்பதையே பொது சர்வீசு கமிஷன் விரும்பு வதும், தனியார் துறையினர்

(4-ம் பக்கம் பார்க்க)

கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்கும் திட்டம்

'தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தும்'— அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, டிச. 2—

"கைத்தறித் தொழிலையே நம்பியிருக்கும் மக்களைப் படிப் படியாக வேறு தொழில்களில்—சிறு தொழில்களில் ஈடுபடுத்த வேண்டும்; அதற்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கு முன்னர், தமிழகத்தில் கைத் தறியை நம்பி வாழும் 25 இலட்சம் பேர்களைக் காப்பாற் றும் முயற்சியில் தமிழக அரசு தீவிரமாக முனையும்"

என்று, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித் தார்.

சென்னை தம்புசெட்டித் தெரு வில் ரூ. 1,30,000 செலவில் கட்டப் பட்டுள்ள கைத்தறி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையி லேயே அமைச்சர் இவ்விதம் கூறி ஞர்.

மாநிலக் கைத்தறித் தொழில் —வணிக சங்கத்திற்காக இக்கட் டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் 28-வது ஆண்டு விழாவையொட்டி சிறப்பு மலரை யும் அமைச்சர் வெளியிட்டார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களின் உருவப் படத்தை அமைச்சர் செ. மாதவன் திறந்து வைத்து உரையாற்றினுர்.

சங்கத் தலைவர் திரு. எஸ். கே. சம்பந்தம் அனைவரையும் வர வேற்று உரையாற்றினுர். சங்கத் துணைத் தலைவர் திரு. டி. ஏ. கண் ணப்பனும் பேசினுர்.

அமைச்சர் நெடுஞ்செழியன் பேசுகையில் மேலும் குறிப்பிட்ட தாவது:—

"அமெரிக்க மக்கட்தொகையில் 13 சதவிகிதத்தினர்தாம் வேளாண்மையில் ஈடுபட்டிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

உணர்வோர் உள்ளம்

தேவநாகரி வரி வடிவத் திணிப்பு ஆபத்து

புதுடில்லியில் 20—10—67-ல் மத்திய இந்தி விரிவுக் குழு கூடி, தேவநாகரி எழுத்து வடிவம் பற்றிய கருத்தரங்கு (Seminar) ஒன்றை நடத்தியது.

அந்தக் கருத்தரங்கை உதவிப் பிரதமர் மொரார்ஜி தேசாய் துவக்கிவைத்தார்; அப்பொழுது அவர், 'மொழிப் பிரச்சினையில் இப்பொழுது எவ்வளவு எதிர்ப்பு இருப்பினும், இந்தி மொழி அகில இந்திய தேசிய பொது மொழியாக வந்தே தீரும் என்பதில் சந்தேகமே இல்லை' என்று கூறிவிட்டு, 'இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளுக்கும் ஒரு பொதுவான எழுத்து வடிவம் இருக்க வேண்டியது அவசியம்' என்றும், 'அப்படிப் பொதுவான எழுத்து வடிவமாக இருக்கக் கூடியது தேவநாகரி எழுத்துதான்' என்றும் கூறினார்.

ஒவ்வொரு மொழிக்கும் தற்போதுள்ள எழுத்து வடிவத்தை நீக்கிவிட்டு, எல்லா மொழிகளுக்கும் தேவநாகரி எழுத்து வடிவம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது நோக்கமல்லவென்றும், தாய்மொழிக்குத் தற்போது உள்ள எழுத்தும் மற்ற மொழிகளைக் கற்பதற்கு தேவநாகரி எழுத்து மாற்று எழுத்தாக இருக்கவேண்டும் என்பதுதான் கருத்து என்றும் விளக்கினார்.

பல்வேறு இந்திய மொழிகளைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும், பல எழுத்து வடிவங்கள் இருப்பதில் சிரமம் இருக்கிறது என்பது உண்மையே. தாய் மொழியைத் தவிர்த்து மற்ற மொழிகளைக் கற்பதற்கு ஒரு பொது எழுத்து வடிவம் இருப்பது மிக மிக நல்லது; விரும்பத்தக்கது; ஆனால், பொதுவாக இருக்கத் தகுதியுள்ள எழுத்து வடிவம் எது?

இந்தி வெறியர்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்ட காங்கிரசு மத்திய அரசாங்கம், 'இந்தி மொழியின் எழுத்தான தேவநாகிரி எழுத்தையே பொது எழுத்து வடிவமாக செய்ய வேண்டும்' என்று பாடுபடுகிறது!

தற்போது உள்ள காங்கிரசு அல்லாத தமிழ்நாட்டு அரசாங்கமோ எனில், பொது எழுத்தின் அவசியத்தை ஒத்துக்கொண்ட போதிலும், 'அப்படிப் பொது எழுத்தாக இருக்கத் தகுதியுள்ளது தேவநாகரி எழுத்து அல்ல' என்றும், 'தகுதியுள்ள எழுத்து ரோமன் (இங்கிலீஷ்) எழுத்தே' என்றும் கூறுகிறது.

தகுதி உள்ள எழுத்து எது? ரோமன் எழுத்தா? அல்லது தேவநாகரி எழுத்தா?—இதை நாம் ஆராய்வோம்.

ரோமன் எழுத்து

இது, ஐந்து உயிர் எழுத்துக்களும் இருபத்தோரு மெய் எழுத்துக்களும் கொண்ட ஒரு சுத்தமான எழுத்து வரிசை அமைப்பாகும். இந்த இருபத்தாறு எழுத்துக்களைக் கொண்ட பலவகைப்பட்ட விஞ்ஞான சாத்திரங்கள், கலைகள் இவைகளை எழுத்து மூலம் வெளியிடத் தேவையான சொற்கள் அமைக்கப்படுகின்றன.

மேலும், இந்திய எழுத்து வடிவங்களில் இல்லாத ஒரு தனிச் சிறப்பு ரோமன் எழுத்து வடிவத்தில் இருக்கிறது. இந்திய வரி வடிவங்களின் எழுத்துக்கள், உயிர் எழுத்துக்களும் அகரம் சேர்த்த உயிர் மெய் எழுத்துக்களும் ஆகும்.

தமிழில் சுத்த மெய்யெழுத்து வேண்டுமானால், ஒவ்வோர் உயிர் மெய் எழுத்தின் பேரிலும் ஒரு புள்ளியை வைக்கிறோம் (க், ங்); அகரம் தவிர்த்த மற்ற உயிரெழுத்துக்கள் கொண்ட உயிர் மெய் எழுத்து வேண்டுமானால், மெய் எழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்களை நேரிடையாகச் சேர்ப்பதில்லை. அதற்குப் பதிலாக, அந்த உயிர் எழுத்துக்களைக் குறிக்கும் அடையாளக் குறிகளைச் சேர்க்கிறோம்; உதாரணமாக, 'ஓ' என்ற உயிர் எழுத்துக்கு அடையாளக் குறி (ே—ா); இதை, 'க' என்ற உயிர் மெய் எழுத்துடன் சேர்த்து, 'கோ' என்ற உயிர் மெய் எழுத்தைப் பெறுகிறோம். ரோமன் வரி வடிவத்தில் செய்வதுபோல், 'KO' என்ற நேரிடையாகச் சேர்ப்பதில்லை. இந்த ஏற்பாட்டினால், தமிழில் உயிர் எழுத்துக்கள் 12; மெய் எழுத்துக்கள் 18; உயிர் மெய் எழுத்துக்கள் 216; ஆயுதம் 1-ஆக 247 எழுத்துக்களைத் தனித்தனியே எழுதிப் பழகவேண்டி இருக்கிறது.

இந்தத் தொல்லைகள் எல்லாம் ரோமன் வரி வடிவத்தில் கிடையாது; அதில், மெய் எழுத்துக்கள் தனி வடிவம் பெற்றுள்ளன. அதில் உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் நேரிடையாகச் சேர்ந்து—உயிர் மெய் எழுத்துக்களை உண்டாக்குகின்றன!

ரோமன் வரி வடிவத்தில் குறில்—நெடில் வேறுபாடு இல்லை; 'த' என்ற 'ஒலி'க்குத் தனி எழுத்து கிடையாது என்ற குறைபாடுகளைச் சிலர் குறிப்பிடலாம். இந்த குறைபாடுகளை, தேவையான எழுத்துக்களை உருவாக்கி எளிதில் நீக்கிவிடலாம்.

எனவே, உயிர் மெய் எழுத்துக்களை உருவாக்குவதில் இந்திய வரி வடிவங்களைவிட ரோமன் வரி வடிவம் முன்னேற்றமானது—மிகவும் வசதியானது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இந்த உண்மையை, இந்தி வெறியர்கள் தவிர மற்ற யாரும் மறுக்க முடியாது.

தேவநாகரி எழுத்து:

தேவநாகரி வரி வடிவம் எளிதில் கையாள முடியாத அளவுக்கு மிகவும் சிக்கலானது பற்பல நூற்றுண்டுகளாக இந்த வரி வடிவம் மாற்றமடையாமலே இருந்துவிட்டதற்கு இதுதான் காரணமாகும்.

அண்மைக் காலத்தில்தான் இந்தி ஏகாதிபத்தியவாதிகள், தங்கள் கையில் பறித்துக்கொண்ட அரசியல் அதிகாரம் அனைத்தையும் தேவநாகரி வரி வடிவத்தை இந்தியாவின் அதிகாரபூர்வமான வரி வடிவமாகச் செய்ததோடு நிற்காமல், அதை, இந்திய மொழிகள் அனைத்துக்கும் பொது வரி வடிவமாகவும் செய்யத் தீவிரமாக முயன்றுவருகின்றனர்.

தேவநாகரியில் பல குறைபாடுகள் உள்ளன; தேவநாகரி லிபியை கற்பதும், நினைவில் கொள்வதும் கடினமாகும். சில எழுத்துக்கள், ஒன்றையொன்று பிரித்துக் காட்டும் தெளிவான வேறுபாடு இல்லாமல் இருந்ததலால், அவைகளை எளிதில் தெரிந்துகொண்டு வாசிக்க முடிவதில்லை; கூர்ந்து கவனித்து வாசிக்கவேண்டி இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, தேவநாகரியில், 'ர' 'வ'—இந்த இரண்டு எழுத்துக்களும் கொஞ்சம் நெருங்கி இருந்தால், வல்லின மூச்சொலி எழுத்து 'க' ஆகிறது. அதேபோல், மெல்லின மூச்சொலி எழுத்துக்கள் 'க'-வையும், 'த'-வையும் ஒப்பு நோக்குக; இந்த எழுத்துக்களின் உருவத்தில் வேறுபாடு சொற்பமே!

தேவநாகரியில் உள்ள குறைபாடுகளில் மிகவும் மோசமானது சுத்த மெய் எழுத்துக்களைச் குறிக்க வசதியான முறை இல்லாததே ஆகும். இந்தியிலும். மராத்தி—குசராத்தி முதலிய மற்ற வட இந்திய மொழிகளிலும், அகரம் சேர்ந்த உயிர் மெய் எழுத்தையே சுத்த மெய் எழுத்தாகவும் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக, முறையே—(1) கர; (2) ர த ந; (3) பல ராம—என்று எழுதி இருப்பதை, (1) கர்; (2) ர தந்; (3) பல்ராம் என்று உச்சரிக்க வேண்டும் என்ற நடைமுறை வழக்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

இது மட்டுமன்றி (1) ப்த; (2) த்ப; (3) த்ஸ்ந—இதுபோன்ற ஒலிகளை காட்டுவதற்கு நூற்றுக் கணக்கான கூட்டெழுத்துக்களையும் தேவநாகரியில் கற்க வேண்டியிருக்கிறது. இவைகள், மாணவர்களின் மனதை திக்குமுக்காடச் செய்கின்றன—தலை கிறுகிறுக்கச் செய்கின்றன—கண்ணுக்குக் கடினமான வேலையைக் கொடுக்கின்றன!

நான், சமஸ்கிருத மொழியை மதிப்பவன்; ஆனால், அதில் சிறிதளவேனும் தேர்ச்சி பெறுவதற்கு ஒரு கடினமான தடையாக தேவநாகரி லிபி நின்றது. இப்பொழுதும் தேவநாகரி லிபியை அச்சில் மட்டுமே எளிதில் நான் படிக்க முடியும். இன்றைக்கும் கூடத்தான் எனக்கு அதை எழுதவும்—நான் எழுதியதையே படிக்கவும்—அதைவிட மற்றவர்கள் எழுதியதைப் படிக்கவும் சங்கடமாக இருக்கிறது.

தேவநாகரி லிபியை எழுதுவதிலும் படிப்பதிலும் உள்ள தொல்லையைப் பற்றிப் பள்ளிக்கூடங்களில் விடைத் தாள்களைத் திருத்தும் சமஸ்கிருத ஆசிரியர்களைக் கேட்டால் சான்று கூறுவார்கள்.

அச்சுக் கோர்ப்பதற்கு இந்த லிபி வசதியாக இருக்கிறதோ இல்லையோ—அது தெரியாது; ஆனால், துரிதமாக வேலை பார்க்க வேண்டியிருக்கும் வியாபாரத் துறைக்கும், மற்ற அலுவல்களுக்கும் தேவநாகரி லிபி நிச்சயமாக உதவாது. மேலும், தேவநாகரியில் 'எ' என்ற உயிரெழுத்தும், 'ஒ' என்ற உயிரெழுத்தும் (குறில்) கிடையவே கிடையாது.

இந்த நிலைமையில், சமஸ்கிருதத்திற்கும் மற்ற இந்திய மொழிகளுக்கும் பொதுவான வரிவடிவமாக இருக்க தேவநாகரி லிபி பயன்படமாட்டாது — தகுதியற்றது.

மேலும், ரோமன் லிபி பொது வரி வடிவமானால், இந்தியாவில் எந்தப் பகுதியில் இருப்பினும், ஒருவன், தாய்மொழியின் எழுத்து—ரோமன் எழுத்து — ஆக இரண்டே வரி வடிவங்கள் கற்றுக்கொண்டால் போதுமானது.

தேவநாகரி பொது எழுத்தாகச் செய்யப்பட்டால், ஒவ்வொருவரும், தாய்மொழியின் எழுத்து—தேவநாகரி எழுத்து—ரோமன் எழுத்து—ஆக மூன்று வரி வடிவங்கள் கற்கவேண்டிவரும்.

எனவே, தமிழ்நாட்டு மக்கள், இது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள்—பெற்றோர்கள்—ஆசிரியர்கள் — அதிகாரிகள்—நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், தேவநாகரி லிபி பொது லிபியாகச் செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்; அலட்சியமாக இருந்தால், இந்தி திணிக்கப்படுவது போல் தேவநாகரி லிபியும் திணிக்கப்படும்.

இலட்சுமண அய்யர்
சென்னை

பாட்டீல் பற்றி...!

"எஸ். கே. பாட்டீல் ஒரு 'டம்மி' வேட்பாளரைப் போலத்தான். மேலிடத்தில் இருக்கும் பலப் பரீட்சையைத் தெரிந்துகொள்ள பாட்டீலின் வேட்பு மனு பயன்படும். 'இந்திராவின் ஆதரவாளர்' என்று சொல்லப்படும் நந்தாவுக்கு, ஒரு மாற்று வேட்பாளர்தான் பாட்டீல்!"

—'டில்லி அரங்கம்' என்ற தலைப்பில் 'நம் நாடு' 14--11--67, 15--11--67 இதழ்களில் வந்த கட்டுரைகளின் பகுதிகள்.

★

"பாட்டீல், உண்மையில் ஒரு வேட்பாளராக மனு தாக்கல் செய்யவில்லை என்பதனை இப்போது தகுந்த ஆதாரத்துடன் கூறலாம். நந்தாவின் சாதகங்களை—அப்படி ஏதாவது இருக்குமானால்—தடுத்து நிறுத்துவதோன்றே அவரது போட்டிக்குக் காரணம்."

—'புதுடில்லிக் குறிப்பு' என்ற தலைப்பில் 3—12—67 'சண்டே ஸ்டாண்டர்டு' இதழில் வெளிவந்த கட்டுரை பகுதி.

இந்தி வெறியர்களின் அவசரம்!

மத்திய துணையமைச்சர் இடித்துரை

இலட்சுமணபுரி, டிச. 5—

"மற்ற எல்லா முக்கியமான சமூக — அரசியல் — பொருளாதாரச் சிக்கல்களையும் மறைத்துவிட்டு, மொழிச் சிக்கல் பெரிதாகிவிட்டது"

என்று மத்திய அரசாங்க உருக்குத் துறைத் துணை அமைச்சர் பி. சி. சேதி கூறினர்.

இந்தியை நாட்டின் தொடர்பு மொழியாக்குவதில் காங்கிரசுக் கட்சி எப்போதும் ஆதரவு காட்டி வந்திருக்கிறது; இப்பிரச்சினை, இந்தி பேசும் பகுதிக்கு மட்டுமன்றி, இந்தியா முழுவதற்கும் பொதுவானது; எனவே, தேசிய ஒருமைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு, இத்துறையில், இந்தி பேசாத மக்களின் இசைவுக்கும் காத்திருக்க வேண்டும்" என்று அவர் கூறினர்.

"இந்திக்கு மாறுவதற்குத் தயாராக இல்லாத மற்ற மாநிலங்களின் உணர்ச்சியைப் புரிந்து மதிப்பளிக்க வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

'நாடு காக்கும் வீரர்களின் நலங் காக்க உதவுவீர்'

'கொடி நாளில் தாராளமாக நன்கொடை வழங்குவீர்'

சென்னை, டிச. 5—

ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் 7-ஆம் நாளை நாம் கொடி நாளாகக் கொண்டாடுகிறோம்.

பாதுகாப்புப் படைகளில் பெருமைக்குரிய முறையில் நீண்ட காலம் பணியாற்றி உன்னதமான தியாகம் புரிந்தவர்களை, நாடு நினைவு கூர்ந்து போற்றுவதன் அடையாளமாக இந்தக் கொடி நாள் கொண்டாடப்படுகிறது.

நமது பாதுகாப்புப் படைகளில் தீரத்துக்காகவும், வீரத்துக்காகவும், உருவான முறையில் மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இந்த நாள் ஒரு வாய்ப்பினை அளிக்கிறது.

நாடு முழுவதிலும் இக்கொடி நாள் கொண்டாடப்படுகிறது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கொடி நாள் நிதிக்காக நன்கொடைகள் ஏற்கப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளில் கணிசமான தொகையைத் திரட்டித் தரத் தமிழகம் தவறியதில்லை.

இத்தொகையில் பெரும் பகுதி, தமிழ்நாட்டின் தரைப் படையினர் — கடற் படையினர் — விமானப் படையினர் போர்டின் நிதித் துணைக் குழுவினர் நிர்வகித்துவரும் முன்னாள் இராணுவத்தினர் நல நிதியில் சேர்க்கப்படும்.

தகுதியுள்ள முன்னாள் இராணுவத்தினர், அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்கு உதவி அளித்துவரவும், இக்கட்டான நிலையில் இருககும் முன்னாள் இராணுவத்தினருக்கு உடனடி உதவியளிக்கவும், என்புருக்கி நோய், தொழு நோய் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு சானிடோரிய சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் இராணுவத்தினரின் கைச் செலவுக்குப் பணம் கொடுக்கவும், அத்தகைய நோயாளிகள் ஆண்டுக்கு ஒரு முறை தங்கள் வீடுகளுக்குச் செல்வதறகுப் போக்குவரத்துக் கட்டணம் அளிக்கவும், ஊனமான முன்னாள் இராணுவத்தினர் சிறு அளவில் வியாபாரம் நடத்துவதற்கு மொத்தமாக ஒரு தொகை உதவவும், உயிர் துறந்த இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்குப் பரீட்சைக் கட்டணம், சிறப்புக் கட்டணங்கள் கட்டுவதற்கு உதவி அளிக்கவும், ஊனமான முன்னாள் இராணுவத்தினர்—முன்னாள் இராணுவத்தினரின் விதவைகள் அல்லது ஆதரவு தரவேண்டிய பெண்கள் ஆகியவர்களை அவர்களது பயிற்சிக் காலத்தில் பயிற்சி நிறுவனங்களில் பராமரிக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

நெருக்கடி நிலைமை இருந்துவரும் தற்போது, முன்னாள் இராணுவத்தினருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உதவியும், புது வாழ்வும் அளிக்கும் பிரச்சினை, தனி முக்கியத்துவம் பெறுகிறது.

நாட்டைக் காக்கும் நமது வீரர்களின் நெஞ்சுரத்தையும் உறுதியையும் பாதுகாப்பதில் தங்கள் பங்கினை ஆற்றும் முறையில், கொடி நாள் நிதிக்கு மனமுவந்து வாரி வழங்குவது பொது மக்கள் அனைவரின் புனிதக் கடமையாகும்.

முன்னாள் இராணுவத்தினர், அவர்களைச் சார்ந்தவர்கள் ஆகியோர் நலனுக்காக நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும், உதவிக்கு ஏற்பாடு செய்யவும் கொடி நாளில் மக்கள் தாராளமாக நிதி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சனநாயகத்தைக் காப்பது எப்படி?

லக்னோவில் மாநாடு

லக்னோ, டிச. 5—

இங்கு அடுத்த மாதம் 4, 5-ம் நாட்களில் நடைபெறவிருக்கும் இரண்டு நாள் மாநாட்டில், 'சனநாயகத்தைக் காப்பது' என்பது விவாதப் பொருளாக இருக்கும்; அதில், அரசியல்வாதிகள்—நீதியாளர்—எழுத்தாளர் ஆகியோர் கலந்துகொள்வர்.

சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி மெகர்சந்த் மகாசன் அதற்குத் தலைமை தாங்குமாறு அழைக்கப்பட்டுள்ளார். மாநாட்டில் 250 பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

மேற்கு வங்கம், அரியானா, பஞ்சாப் ஆகியவற்றின் முன்னாள் முதலமைச்சர்கள், அதில் முக்கியப் பேச்சாளர்களாக இருப்பர்.

இந்திய இளைஞர் மாநாடு கூட்டும் அம்மாநாட்டை உ. பி. முதலமைச்சர் சரண் சிங் துவக்கி வைப்பார்.

தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலைகள்!

தலைநகரில் ஒன்பது இடங்களில் நிறுவப்படும்

சென்னை, டிச. 4—

தமிழகத் தலைநகரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ்ப் பெரியார்களின் உருவச் சிலைகள் நகரின் முக்கிய இடங்களில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் ஒன்பது சிலைகள் நிறுவப்படும். அதற்கான இடங்களை அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி இருவரும் பார்வையிட்டு இன்று முடிவு செய்தனர்.

முதலமைச்சர் **அறிஞர் அண்ணா** அவர்களின் சிலை, மவுண்ட் ரோடு எல்பின்ஸ்டன் திரையரங்கு எதிரில் (ரவுண்டானா பகுதி) அமைக்கப்படும்; இந்த உருவச் சிலையை புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அளிக்கிறார்.

கப்பலோட்டிய தமிழன் **வ. உ. சிதம்பரனார்** சிலை, வடக்குக் கடற்கரைச் சாலையில்—துறைமுக டிரஸ்டு அலுவலகத்திற்கு எதிரில் அமைக்கப்படும்; இச்சிலையை சென்னை மாநகராட்சி வழங்குகிறது.

கவிச் சக்கரவர்த்தி **கம்பர்** சிலை, கடற்கரையில்—பல்கலைக்கழகக் கட்டிடத்திற்கு எதிரில் அமைக்கப்படும்; இச்சிலையை கம்பர் அன்பர்கள் அளிக்கின்றனர்.

தேசியக் கவி **சுப்பிரமணிய பாரதியார்** சிலை, கடற்கரையில்—பொதுப் பணித்துறை அலுவலகத்திற்கு எதிரில் அமைக்கப்படும்; இச்சிலையை மாநகராட்சி வழங்குகிறது.

கற்புக்கரசி **கண்ணகி**யின் சிலை, கடற்கரையில் — பைக்ராப்ட்ஸ் சாலையும் - தெற்குக் கடற்கரைச் சாலையும் சந்திக்கும் இடத்தில் நிறுவப்படும்; இச்சிலையை மாணவர்கள் அளிக்கின்றனர்.

திருவள்ளுவர் சிலை, கடற்கரையில்—பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்திற்கு எதிரில் அமைக்கப்படும்; இந்தச் சிலையை நடிகர் சிவாஜி கணேசன் வழங்குகிறார்.

புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்** சிலை கடற்கரையில் — லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரிக்கு எதிரில் அமைக்கப்படும்; இச்சிலை, மாநகராட்சியால் வழங்கப்படுகிறது.

ஔவையார் சிலை, மேரி அரசி கல்லூரிக்கும் -- லேடி வெல்லிங்டன் கல்லூரிக்கும் இடையே —லாயிட்ஸ் சாலையும் -- தெற்குக் கடற்கரைச் சாலையும் சேருமிடத்தில் நிறுவப்படும்; இந்தச் சிலை, மாநகராட்சியால் வழங்கப்படுகிறது.

வீர மாமுனிவர் சிலை, கடற்கரையில்—வானொலி நிலையத்திற்கு எதிரில் அமைக்கப்படும்; இந்தச் சிலையை மயிலாப்பூர் ஆர்ச் பிஷப் அளிக்கிறார்.

கைத்தறி நெசவாளர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள். அவர்கள், தங்கள் நாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முழுவதையும் விளைவித்துக் கொள்வதுடன், வெளி நாடுகளுக்கும் அனுப்பி வருகிறார்கள். மீதமுள்ள மக்கள் தொழில்துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதே போன்ற நிலை இங்கு ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும்.

'நம்முடைய நாட்டில், 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்றும், 'ஆறு மாதம் நூலும் மயிலும்; ஆறு மாதம் வேலும் மயிலும்' என்றும் பெரும் பகுதி நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் நிலை இன்னமும் இருந்துவருகிறது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

'தொழில் துறையை அடிப்படையாகக்கொண்டு மக்கள் இயங்கத் துவங்கினால், ஜப்பானைப் போல் தமிழகமும் முன்னேற முடியும்' என்று அசோக்மேத்தா கருத்தறிவித்துள்ளார். தொழில் துறையில் விரைந்து முன்னேறுவதற்கான அடிப்படை அறிவாற்றல் தமிழக மக்களிடம் நிரம்ப உண்டு; அதை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும்.

போலந்து, ஹங்கேரி, டென்மார்க் போன்ற நாடுகளில் கூட்டுறவு இயக்கம், நடுத்தர மக்கள் நிம்மதியோடு வாழும் வகையில் தன் சொந்த பலத்தில் நின்று செம்மையாகச் செயல்பட்டு வருகிறது; ஆனால் நமது நாட்டிலோ, கூட்டுறவு இயக்கத்தில் போகும் பணம் திரும்பி வருவதே சந்தேகத்தில் இருக்கிறது; போன வழி தெரிகிறதே தவிர திரும்பு வழியைக் காணோம்!

பொருளாதார அடிப்படையில் பலவீனமான மக்களுக்காக நடத்தப்படும் கூட்டுறவு இயக்கம், சிறப்புடன் செயல்படுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் கடமையாகும்.

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிக்கக் கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய சாதனங்கள் உரிய காலத்தில் உரிய முறையில் கிடைக்கக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசுக்கு ஆலோசனை கூற முன்வர வேண்டும்."

அமைச்சர் மாதவன்

கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கைத்தறித் தொழில் நீடிக்க வேண்டுமா—வேண்டாமா என்பதை இந்திய அரசு திட்டவட்டமாக முடிவு செய்யாமல் குழப்ப நிலையில் இருந்துவருகிறது.

"வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் இந்தியத் தூதுவர்கள் நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களின் அடிப்படைகளை உணர்ந்து கொள்வதில்லை. அரசின் திட்டங்களை ஒப்புக்கொண்ட பின்னர் அவற்றைச் செயல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்."

உ. பி. அரசு வேலைக்கு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும் கவர்ச்சியான சம்பளத்தை அளிப்பதும் அதற்கான காரணங்களாகும்.

உதாரணமாக, தமிழ்நாட்டிலிருந்து 300 டாக்டர்களை வேலைக்கு எடுக்க உ. பி. மாநில சுகாதாரத் துறை முயற்சி செய்தது; ஆனால், அம்முயற்சி பலிக்கவில்லை!

மாநிலத் துணை முதலமைச்சர் இராம் பிரகாஷ் கூறிய யோசனைக்கேற்ப, சர்வீசு கமிஷன் தனது பரீட்சைகளை ஆங்கிலத்தில் அல்லாமல், இந்தியில் நடத்தினால் நிலைமை மேலும் மோசமாகும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் பள்ளி—கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வருபவர்கள், போதிய ஆங்கில அறிவு இல்லாதவர்களாக இருப்பர் என்பதால், மாநில சர்வீசு கமிஷன் தனது பரீட்சைகள் அனைத்தையும் இந்தியில் நடத்தவேண்டுமென்று கமிஷனிடம் இராம் பிரகாஷ் கூறியுள்ளார்.

இது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்; 'ஆங்கிலத்திலும் பரீட்சைகளை எழுதலாம்' என்று மாநில சர்வீசு கமிஷன் விருப்ப ஏற்பாட்டைக் கைக்கொள்ளும் என்று தெரிகிறது.

காங்கிரசுத் தலைவர் பிறந்த கதை :

'இங்கே கொஞ்சம் வேலை இருக்கு--வாங்கோ'

இப்படி அழைக்கப்பட்ட என்னைக் 'கேரோ' செய்துவிட்டனர்!

தாம் காங்கிரசுத் தலைவராக ஆக்கப்பட்டிருப்பது எப்படி என்பதை மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பாவே கூறியிருக்கிறார்.

"கட்சியின் மேலிடத் தலைவர்கள் என்னை 'கேரோ' செய்து ஒப்புதல் பெற்றுவிட்டார்கள்"

என்று, பெங்களூரில் செய்தியாளர்களிடையே பேசியிருக்கும் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

"கடந்த புதன்கிழமையன்று, புதுடில்லியிலிருந்து காமராசர் தொலைபேசி மூலம் என்னைக் கூப்பிட்டார்; 'இங்கே கொஞ்சம் வேலை இருக்கு; வாங்கோ' என்று மட்டுமே கூறினார்; ஆனால், 'இப்படிக் கட்டிப்போடப்படுவேன்' என்று நான் அப்போது நினைக்கவே இல்லை!

"(வியாழக்கிழமை) இரவு தலைமையமைச்சரை அவரது வீட்டில் நான் போய்ப் பார்த்தபோது, அவர் தனியாகத்தான் இருந்தார்; சிலர் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்; சிறிது நேரம் கழித்து, தற்செயலாக வருவதுபோல் ஒருவர் பின் ஒருவராக அரை டஜன் பேர்வழிகள் வந்து, என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டு 'கேரோ' செய்துவிட்டனர்!

"அன்று இரவு அந்தக் கூட்டத்தில் காமராசர் இல்லை!

"எல்லோரும் கட்டாயப்படுத்தினார்கள்; ஒன்றைச் செய்யச் சொல்லிக் கேட்டுக்கொண்டால் எப்படி மறுப்பது? —ஏற்றுக்கொண்டேன்; எப்படியோ அவர்கள் சதி செய்து என்னைத் தலைமைப் பதவி ஏற்கச் செய்துவிட்டார்கள்!

"என்னை இப்பதவிக்குத் தேர்ந்தெடுத்தது குறித்துக் காமராசருக்கு அதிருப்தி இல்லை; ஆனால், இதற்காகக் கையாண்ட முறைதான் அவருக்கு வேதனையாக இருந்தது. அந்த நள்ளிரவுக் கூட்டத்திற்குத் தம்மையும் அழைத்திருக்கலாம் என்பதுதான் காமராசரின் கருத்து!"

'நம்பூதிரிபாடு'க்கு வாதாட வழக்கறிஞர் 'படை'?

கேரள முதலமைச்சருக்குப் பக்கபலமாக 101 சட்டத்துறை நிபுணர்கள்!

கடந்த முதல் தேதியன்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, திருவனந்தபுரம் பத்திரிகையாளர் கூட்டத்தில் தெரிவித்த கருத்து ஒன்று, 'மாநில நீதிமன்றங்களையும், நாட்டின் நீதித் துறைகளையும் பழிப்பதாக இருக்கிறது' என, கேரள மாநில பார்-கவுன்சில் உறுப்பினர் டி. நாராயண் என்பவர் தொடுத்திருக்கும் வழக்கில், நம்பூதிரிபாடுக்கு ஆதரவாக வாதாட 101 வழக்கறிஞர்கள் ஒப்புதல் தெரிவித்திருக்கின்றனர்!

மோகன் குமாரமங்கலம் அல்லது வி. கே. கிருஷ்ணமேனன் தலைமையில் இந்த வழக்கறிஞர் குழு அமையும் எனத் தெரிகிறது.

வலதுசாரிக் கம்யூனிஸ்டு டி. சி, என். மேனன் என்பவர் கூட்டியுள்ள இக்குழுவில், முன்னாள் கேரள அமைச்சர்கள் வி. ஆர். கிருஷ்ண அய்யர், கே. சந்திரசேகரன் ஆகியோரும் இடம் பெற்றிருக்கிறார்கள்!

உண்மை உணர்ந்தேன்-- விலகிவிட்டேன்!

காங்கிரசுக் கட்சியில் மேடைப் பேச்சாளராக இருந்துவந்த திருமதி வேலம்மையார், தாம் அந்தக் கட்சியிலிருந்து விலகிவிட்டது குறித்துப் பின்வருமாறு அறிவிக்கிறார் :—

"தமிழக மக்களின் நல்வாழ்விற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் நிலைத்த தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிவரும் தி. மு. கழகத்திலிருந்து ஒன்றரை ஆண்டிற்குமுன் விலகி—ஒரு சிலரின் வற்புறுத்தலால்—காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து நான் பணியாற்றியது யாவரும் அறிந்ததே.

அவ்வாறு விலகியிருந்த காரணத்தால்தான், என்னால் தி. மு. கழகத்தின் உயர்ந்த சிறப்பையும், பெரும் பகுதியான மக்கள் உள்ளத்தில் தி. மு. கழகம் ஏன் அழியாத ஓரிடத்தைப் பெற்றிருக்கின்றது என்ற உண்மையையும் உணர முடிந்தது.

1967-ல் நடந்த தேர்தலின் முடிவு, கழக அரசுக்கு மக்கள் சூட்டிய மணிமுடியே ஆகும். தி. மு. கழகத்தின் ஆணிவேர் தமிழகம் முழுவதும் வேரூன்றி-வடநாட்டிலும் விழுதுகளைப் பரப்பி—தமிழக அரசில் தனக்கென நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது.

அடுத்து, தென் சென்னையில் நடந்த இடைத் தேர்தலில், திரு. மாறன் அவர்கள்மூலம் தி. மு. கழகத்திற்குக் கிடைத்த தனிப் பெரும் வெற்றி, 'காங்கிரசுக் கட்சி, தமிழகத்தின் எதிர்க் கட்சியாகவாவது தொடர்ந்திருக்க முடியுமா?' என்ற ஐயத்தை முன்னிறுத்தியுள்ளது. மக்களின் நம்பிக்கையை இழந்த காங்கிரசுக் கட்சியிலிருந்து கொண்டு என் போன்றோர் பொதுத் தொண்டு செய்ய நினைப்பது, குருடன் குறி பார்ப்பதுபோலாகும்!

தேர்தல் களத்தில், நான் சென்ற இடமெல்லாம் நம் தலைவர் அண்ணாவின் புகழ்பாடும் மக்களைத்தான் சந்தித்தேன். படி அரிசித் திட்டத்தால் பயனடையும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அண்ணாவை வாழ்த்திய போது என் மனமும் சேர்ந்து வாழ்த்தியது.

ஆகவே, நம் தலைவர் அண்ணாவின் தலைமையின்கீழ் என்றும் போல் தொண்டாற்ற வந்துவிட்டேன்."

கொடுத்தால் திரும்பவும் பெற முடியாதது ......

பெண்--பேச்சு--பரிசு!

மக்களவையில் ஒரு சுவையான விவாதம்

★

"வாயிலிருந்து வெளி வந்த சொல்—வழங்கிவிட்ட பரிசு—கொடுக்கப்பட்ட பெண்—ஆகிய மூன்றும் திரும்பப் பெற முடியாதவை"

என விவரித்தார்—ஆந்திரத்து உறுப்பினர் தென்னேட்டி விசுவநாதன்.

வங்கக் கவர்னரின் நடவடிக்கை பற்றி மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், 'மேற்கண்ட மூன்றையும் போலவே கவர்னரின் அமைச்சரவைக் கலைப்பும் அதிகாரமும் திரும்பப் பெற முடியாதவை' என்று 'நாரத ஸ்மிருதி'யிலிருந்து உதாரணம் காட்டிக் குறிப்பிட்டார்.

"இந்தியாவில் கொடுத்துவிடக் கூடிய பொருளா, பெண்?" என்று உடனே கொதிப்புமிக்க கேள்வி ஒன்று பிறந்தது—திருமதி சுசீலா நய்யாரிடமிருந்து!

"ஆமாம்; திருமணத்தில் பெண்கள் கொடுக்கப்பட்டுவிடுகிறார்கள்; எனவே, திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகி விடுகிறார்கள்".

என்று விளக்கம் வந்தது கம்யூனிஸ்டு உறுப்பினர் அனந்தன் நம்பியாரிடமிருந்து!

வானொலியில் மதியழகன் உரை

சென்னை, டிச. 4—

தமிழக உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இத்தாலி சென்றிருந்தபோது, வாடிகன் வானொலியில் ஆற்றிய தமிழ் உரையின் ஒலிப் பதிவு 6—12—67 மாலை 6-30 மணிக்கு, சென்னை 'எ' வானொலி நிலையத்திலிருந்து 416.7 மீட்டர் அலைவரிசையில் ஒலிபரப்பப்படும்.

ரோம் நகரில் நடந்த உலக உணவு மாநாட்டில் அமைச்சர் மதியழகன் ஆற்றிய ஆங்கில உரையும் அதே அலைவரிசையில் 7—12—67 இரவு 9-15 மணிக்கு ஒலிபரப்பப்படும்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி மகள் திருமணம்

★

திரு. ஏ. வி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்களின் மகள் செல்வி **வசந்தகுமாரிக்கும்** — செல்வன் **நாகரத்தினத்திற்கும்** 6—12—67 காலை 10-30 மணியளவில், விருதுநகர் தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில் உள்ள திருமண மண்டபத்தில் **பெரியார் ஈ. வெ. ரா.** அவர்கள் தலைமையில்—**அறிஞர் அண்ணா** அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

சட்டமன்ற அவைத் தலைவர் ஆதித்தனார், அமைச்சர்கள், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible] வெளியிடப்படுகிறது.)